1986–87 ஆம் ஆண்டிற்கான ''பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு'' விற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. யு. பி. மாதையன்.
2. திரு. வி. ஆர். கிருஷ்ணசாமி.
3. திரு. வே. தமிழ்மணி.
4. திரு. மு. சின்னக்குழந்தை.
5. திரு. எஸ். சங்கரலிங்கம்.
6. திரு. எஸ். பி. துரைராசு.
7. திரு. ஆ. சந்திரசேகரன்.
8. திரு. சா. ஜெயச்சந்திரன்.
9. திரு. பொன் முத்துராமலிங்கம்.
10. திரு. எஸ். என். இராமசாமி.
11. திரு. வை. பாலச்சந்திரன்.

பேரவையின் 294 (2)-வது விதியின் கீழ் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(முற்பகல் 10-30)

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) விதி 112-ன் கீழ் தொழிலாளர்கள் பணிக்கொடை நிதி பற்றி நிதியமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112-ன் கீழ் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் 'தொழிலாளர்களுக்கு பணிக் கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது, மாநில அரசுக்குத் தெரியுமா?' என்பது குறித்து விடுத்த உடுக்குறியிட்ட வினா எண். 260 (வரிசை எண் 4169)-க்கு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 25–3–1986 ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவையில் விடை அளித்தார்கள். அந்த விடைக்கு ஒரு திருத்தத்தோடு கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

'தொழிலாளர்கள் ஓய்வு பெறும் போது, பணிக் கொடை வழங்குவதற்காக பணிக் கொடை நிதி (கிராஜுட்டி ஃபண்ட்) ஒன்றினை அமைப்பதற்காக 1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தைத் திருத்தி அமைக்க உத்தேசித்துள்ள மத்திய அரசின் செயற்குறிப்புக்கு இந்த அரசு ஆதரவு தெரிவித்து மத்திய அரசிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. நிர்வாகங்களினால் அளிக்கப்படும் தொகையிலிருந்து உருவாக்கப்படுகின்ற நிதி தான் இது. இந்த நிதிக்கு தொழிலாளர்கள் பணம் செலுத்த வேண்டியது இல்லை. எனவே, இந்த நிதிக்கு தொழிலாளர்களிடமிருந்தும் தொகை பிடிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு முயற்சி எடுத்தால், அதை இந்த அரசு எதிர்க்குமா என்ற கேள்விக்கு இடமில்லை. ஒரு வேளை அப்படி ஒரு பரிந்துரை இந்த அரசுக்குக் கிடைக்கப் பெற்றால் அதனை மாற்றி அமைக்கும்படி மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும்.'

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை தங்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி அறிக்கைகளை எங்களுக்கு 'சர்குலேட்' செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், இந்த அறிக்கை படித்ததோடு நின்று விடுகிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லைப்ரரியிலே டேபிளிலே வைக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் அங்கே சென்று பார்த்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

திரு. கு. ரமணி : லைப்ரரியிலே ஒவ்வொருவரும் போய் பார்த்துக் கொண்டிருப்பது சிரமம். எனவே இந்த அவைக்குள்ளே இருக்கிற எங்களுக்கு உள்ள உரிமையாக, அதை சர்க்குலேட் செய்தால், மெம்பர்களுக்கு செய்யக் கூடிய நல்ல வசதியாக இருக்கும் என்பதற்காக நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதியிலே 'லைப்ரரியிலே தான் வைக்கப்பட வேண்டும்' என்று இப்போது இருக்கிறது. வேண்டுமானால், அதை ரூல்ஸ் கமிட்டியில் சொல்லி மாற்றி விடலாம்.

தி . கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது என் கேள்வி சம்பந்தப்பட்ட அறிக்கையாக இருப்பதால், எனக்காவது தரப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.